மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை கொள்ளும்

வண்ண வண்ணப்பட்டு, பருத்தி புடைவைக் கடல்

திருமாட்டி
புடைவைக் கடல்

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு விலை: ரூபா 5-00 Registered as a Newspaper

# உதயன்

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு2026 ஆடி 03 புதன்கிழமை (19-07-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 236

கல்யாண முகூர்த்தப் புடைவைகளின்

கைராசியான முன்னணி நிறுவனம்

திருமாட்டி
புடைவைக் கடல்

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# படை ஆக்கிரமித்த பகுதியில் உடைமைகளுக்கு பேரழிவு!

## எனினும் இடம்பெயர்ந்த மக்கள் தம் வீடுகளுக்குத் திரும்புகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூலை 19

வலிகாமம் மேற்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் ஸ்ரீலங்காப் படையினர் மேற்கொண்ட "முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கையால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட உயிர்ச் சேதங்கள் ஒரு புறமிருக்க, பொது மக்களின் உடைமைகள், வீடுகள் போன்றவற்றுக்கும் பேரழிவு ஏற்பட்டிருக்கிறது.

இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த மக்கள் தத்தமது வீடுகளுக்குத் திரும்பலாம் என அறிவிக்கப்பட்டதை அடுத்து நேற்று சொந்த இடங்களுக்குத் திரும்பியோர் அங்கு தமது உடைமைகளுக்கு ஏற்பட்ட பேரழிவைக் கண்டு அதிர்ச்சியுற்றனர்.

படையினர் பொழிந்த ஷெல் மழையாலும், விமானக் குண்டு வீச்சுக்களாலும் நூற்றுக்கணக்கான வீடுகள், நாசமாக்கப்பட்டுக் கிடக்கின்றன; முன்னேறிய இராணுவத்தினர் டாங்கிகள், கனரக வாகனங்கள் கொண்டு வீடுகளின் மதில்களையும் சுவர்களையும் இடித்துத் தள்ளியுள்ளனர்; வேலிகளும் ஆங்காங்கே வெட்டி சரிக்கப்பட்டு கொளுத்தப்பட்டுக் கிடக்கின்றன.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப... "கல்லுளி மங்கன் போன வழி காடு மேடு எல்லாம் தவிடு பொடி" எண்ட மாதிரி எண்டு சொல்லுங்கோ...!

## மட்டு. நகரில் வெடித்த குண்டு

கொழும்பு, ஜூலை 19

மட்டக்களப்புநகரில் கடந்த சனிக்கிழமை இரவு7-30மணியளவில் குண்டு ஒன்று பெரும் சத்தத்துடன் வெடித்தது.

பார்சல் செய்யப்பட்டு போடப்பட்டிருந்த ஒரு குண்டே வெடித்திருக்க வேண்டும் என்று பின்னர் தெரிய வந்தது. (ஒ)

## ஜி. சீ. ஈ. பரீட்சை குறித்து கொழும்பில் நேற்று மாநாடு

யாழ்ப்பாணம், ஜூலை 19

ஜி. சீ. ஈ (உயர்தரப்) பரீட்சையை திட்டமிட்டபடி எதிர்வரும் 31 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணத்தில் நடத்தலாமா என்பது குறித்து ஆராய நேற்று கொழும்பில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடைபெறவிருந்தது.

கூட்டுப்படையின் தலைமையகத்தில் நடக்கவிருந்த மாநாட்டில் பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகளும், பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளும் பங்குபற்றுவர்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்ந்து சடலங்கள் மீட்கப்பட்டு வருகின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 19

சண்டிலிப்பாய் மற்கு, சீரணி அம்மன் கோயிலடிக்குச் சமீபமாக — சங்கானை வீதியில் — வீட்டு வளவில் — மலக் குழியினுள் — தலை குப்புற இரு சடலங்கள் காணப்பட்டன. அவற்றில் ஒன்று ஆணுடையது மற்றயது பெண்ணுடையது.

சடலங்களில் இருந்து துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது.

இவர்கள் இருவரும் அப்பகுதியில் நிலைகொண்டிருந்த படையினரால் கொல்லப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயப் பகுதி மற்றும் இராணுவ நடவடிக்கை இடம்பெற்ற பகுதிகளில் நேற்றும் சிதைந்த மனித சடலங்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## வரி செலுத்துவோருக்கான சிறப்புக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 19

வரி செலுத்துவோருக்கான சிறப்புக் கூட்டங்களைநடத்துவதற்கு வருவாய் பகுதி ஏற்பாடுகள் செய்துள்ளது.

பின்வரும் அட்டவணையின் படி நடைபெற உள்ள இச் சிறப்புக் கூட்டங்களுக்கு அவ்வப்பகுதியைச் சேர்ந்த வரிக்குட்பட்ட வாணிப உரிமையாளர்களை தத்தமது வரி ஆவணத்துடன் குறித்த நேரத்திற்கு தவறாது வருகைதருமாறு வருவாய்ப் பகுதிப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

✶ வலிகாமம் வரி செலுத்தும் பிரிவு

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் உ. அ. அ. பிரிவுகள் — 23 - 7 - 95 (ஞாயிறு) மு.ப. 10-30 மணிக்கு—யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில்.

✶ தென்மராட்சி வரி செலுத்தும் பிரிவு

தென்மராட்சி, பச்சிலைப் பள்ளி உ. அ. அ. பிரிவுகள் —

(5 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகத்தில் இரத்த தானம் செய்து ஈழத்தமிழருக்கு அனுப்பிவைப்போம்

## பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் அறிவிப்பு

லண்டன், ஜூலை 19

"போரில் சிக்குண்ட ஈழத் தமிழர்கள் இரத்தம் இல்லாமல் செத்து மடிவதாக அறிகிறோம். அதற்காக செஞ்சிலுவைச் சங்கம் மூலம் இரத்த தானம்செய்து அங்கு அனுப்பத் துடிக்கிறோம். இதில் முதலில் நான் இரத்ததானம் கொடுப்பேன். தொடர்ந்துபல நூற்றுக்கணக்கான தொண்டர்கள் கொடுப்பார்கள். அதை செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அங்கு அனுப்பலாம் என்ற எண்ணத்தில் இருக்கிறோம்."

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் மேற்கண்டவாறு பி. பி. ஸிக்குத் தெரிவித்தார்.

அங்கிருந்து காயம்அடைந்த நிலையில் வரும் அப்பாவித் தமிழர்களுக்கு டாக்டர் என்ற வகையில் குழு ஒன்று வைத்து சிகிச்சை அளிக்கலாம் என்ற எண்ணத்தில் இருக்கிறோம் — என்றும் அவர் சொன்னார்.

சென்னையில் உள்ள ஸ்ரீலங்

(5 ஆம் பக்கம் பார்க்க)

# கச்சதீவில் இந்தியக் கொடியை ஏற்றப் போவதாக தி.மு.க. அறிவிப்பு

கச்சதீவில் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி — இந்திய சுதந்திர தினத்தன்று — இந்தியத் தேசியக் கொடியை ஏற்றப்போவதாக தி. மு. க அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான வேறு பல அமைப்புகளும் இந்நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கச்சதீவு யாருக்குச் சொந்தமானது என்பது தொடர்பாக பலகாலமாக இந்தியாவிற்கும் ஸ்ரீலங்காவிற்குமிடையே இழுபறி இருந்து வந்தது. ஆனால் 1974 இல் இந்திரா — சிறிமா ஒப்பந்தத்தின் கீழ் கச்சதீவு இலங்கைக்குச்சொந்தமாக்கப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. [ஒ-10]

# களுத்துறையில் மூண்ட கலவரத்தில் 4 முஸ்லிம் இளைஞர்கள் பலி!

## சிங்களவர், முஸ்லிம்கள் 20 பேர் படுகாயம்

கொழும்பு, ஜூலை 19

களுத்துறையில் நேற்று சிங்கள — முஸ்லிம் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியை அடுத்து ஏற்பட்ட மோதல் சிங்கள — முஸ்லிம் கலவரமாக வெடித்தது.

கலவரத்தை அடக்க பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகத்தில் நான்கு முஸ்லிம் இளைஞர்கள் கொல்லப்பட்டனர்; சிங்களவர், முஸ்லிம்கள் இருவர் தரப்பிலும் 20 பேர் படுகாயமடைந்தனர்.

காயமுற்ற இருபது பேரில் 14 பேர் அவசர சிகிச்சைக்காக கொழும்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டனர்.

கிரிக்கெட் ஆட்டத்தை அடுத்து ஏற்பட்ட வாய்ச் சண்டை மோதலாக மாறி கலவரமாக வெடித்ததாக

(5 ஆம் பக்கம் பார்க்க)

## உயிர், உடைமைச் சேதம், திருட்டு: காவல் பணிமனைகளில் முறைப்பாடுகளை பதியவும்!

யாழ்ப்பாணம், ஜூலை 19

இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்ட இழப்புகள் பற்றிய பொதுமக்களின் அனைத்து முறைப்பாடுகளையும் காவல் பணிமனைகளில் உடன் பதிவு செய்து கொள்ளுமாறு தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் திரு. பா.நடேசன் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்கு ஆகிய பிரதேசங்களில் கடந்த வாரம் சிங்கள இராணுவத்தின் இராணுவ நடவடிக்கை இடம்பெற்றது. இதன்போது எமது மக்களுக்கு ஏற்பட்ட உயிர்ச்சேதம், காயமடைந்தோர், காணாமற்

[5ஆம் பக்கம் பார்க்க]

வெகுவிரைவில்!

நிதர்சனமும், மட்டு. அம்பாறை சிறப்புப் படையணியும் இணைந்து வழங்கும்

சி. சேரனின் "உறங்காத கண்மணிகள்"

(முழுநீளத் திரைப்படம்)

திரைப்பட வெளியீட்டுப் பிரிவு,
நிதர்சனம், யாழ்ப்பாணம்.

(சி-1696)

Digitized by Noolaham Foundation.

உ

குரு அருள் பெற்று குவலயம் வாழ்க

## வித்தகம் ஆசியுடன்

தமிழர் துயர் தீரவும், தாயக மண் மீட்புக்கு
போராடும் எம்மவர்களின் வீரமும்
வெற்றியும் ஓங்கிடவும்

## அகண்டநாம பிரார்த்தனையும்
## மகா வேள்வியும்

சாவகச்சேரி பெரியமாவடி "வித்தகம்" எனும் பிரார்த்தனை மண்டபத்தில் தமிழுக்கு ஆனி 32 ஆம் நாள் ஞாயிறு காலை (16-07-95) 7 மணி தொடக்கம் ஆடி 7 ஆம் நாள் வரையும் (ஒரு வாரம் 23-07-95) இடைவிடாது தொடர்ந்து அகண்ட நாம பிரார்த்தனை நடைபெறும்.

அதில் அன்பர்கள் பங்கு கொண்டு அனர்த்தங்களும் அழிவுகளும் நீங்க ஆண்டவனை வேண்டிட வாரீர்!

எம் அவனியை மீட்டிடப் பாடீர்!
குரு அருள் பெற்று குவலயம் வாழ்க

வித்தகம் — சுவாமிகள்
திருநீலகண்ட இளைஞர், — அருளாணையின்
சைவ அபிவிருத்திச் சபை, — வன்மை வித்தக
பெரிய மாவடி, — செல்வர்கள்
சாவகச்சேரி. (37612)


## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை. 19

தற்போதைய இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்தவர்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று — வலி. தெற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டவர்களுக்கென — நாளை காலை 9 மணிக்கு யாழ் அரச அதிபர் தலைமையில் மருதனார்மடம் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் நடைபெறவிருக்கிறது.

இப் பிரிவுக்குட்பட்ட அரச ஊழியர்களையும் சமூக அமைப்புப் பிரதிநிதிகளையும் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் கேட்டுள்ளார். [ஓ—3]

## கட்டளை கப்பலை தகர்த்தழித்த
# 8 மாவீரர்களுக்கு இன்று நினைவுக்கல் நடப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 19

காங்கேசன்துறை துறைமுகத்தினுள் புகுந்து கடற்படைக்குச் சொந்தமான பாரிய கட்டளைக் கப்பலைத் தகர்த்து அழித்து சாதனை புரிந்து வீரச்சாவடைந்த — கடற்கரும்புலி மேஜர் நியூட்டன், கடற்கரும்புலி மேஜர் தங்கன், கடற்புலி கப்டன் நாயகி, கடற்புலி கப்டன் கமலம், கடற்புலி லெப். நவமலர், கடற்புலி லெப். யாழரசி, கடற்புலி 2 ஆம் லெப். மைதிலி, கடற்புலி கப்டன் வில்வன், ஆகிய மாவீரர்களின் திருவுருவப்படங்கள் இன்று பிற்பகல் 3 மணியளவில் குருநகர் ச.ச நிலையத்தில் மக்களின் இறுதி வீரவணக்கத்திற்காக வைக்கப்பட்டிருக்கும்.

தொடர்ந்து அங்கு இறுதி வீரவணக்கக் கூட்டம் நடைபெறும். பின்னர் அங்கிருந்து பூரண அணிவகுப்பு மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் எட்டு மாவீரர்களினதும் நினைவுக் கற்கள் நடப்படும். (ஓ)

## ஓய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் ஜூலை மாத ஓய்வூதிய வவுச்சர்கள் நேற்று மாலை செயலகத்துக்கு வந்து சேர்ந்தன.

இந்த வவுச்சர்கள் இன்று தரம்பிரிக்கப்பட்டு ஓய்வூதியர்கள் ஓய்வூதியம் பெறும் வங்கிகளில் வைத்து நாளை வழங்கப்படும். (ஓ—3)

## வலி, வடக்கு பிரதேச செயலர் அலுவலகம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

மல்லாகத்தில் செயற்பட்டு வந்த வலி. வடக்கு பிரதேச செயலர் அலுவலகம் உரும்பராய் இந்துக் கல்லூரிக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வலி வடக்கு பிரதேச செயலர் திரு நா. வேதநாயகன் தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட இடம்பெயர்வு சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நாளை முற்பகல் 11 மணிக்கு அங்கு நடைபெறும் அவர் என்றும் தெரிவித்தார். [ஓ—3]

## பளைப் பகுதியில் ஏற்பட்ட பதற்றம்!

தென்மராட்சி, ஜூலை 19

நேற்று முன்தினம் திங்கட்கிழமை பகல் விறகு வெட்டச் சென்ற சிலர் இயக்கச்சி கறுக்காய் காடு வழியாக தர்மக்கேணிப் பகுதிக்கு சீருடை தரித்து ஆயுதங்களுடன் வந்தவர்களைக் கண்டு இப்பகுதிக்கு படையினர் வருவதாகக் கூறிக்கொண்டு ஓடியதால் பளைப் பிரதேசம் சுமார் இரண்டு மணி நேரம் அல்லோல கல்லோலப்பட்டது.

பதற்றமடைந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் சைக்கிள்களிலும் கால்நடையாகவும் எழுதுமட்டுவாழ் பகுதிக்கு இடம்பெயர்ந்தனர்.

விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக் கண்ட சிலர் பரப்பிய தவறான செய்தியை அடுத்தே இந்த பதற்றநிலை ஏற்பட்டது. [ஓ 117]

## தமிழீழ காவல்துறை
## பதவி வெற்றிடங்கள்

தமிழீழ காவல்துறையில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு தமிழீழ பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் 1995-07-25ந் திகதி வரை தமிழீழ காவல்துறை பழைய பூங்கா அலுவலகத்திற்கு நேரில் சமூகம் தரவும் ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

### 01) உபபரிசோதகர் தரம்.

1) வயது : 18 – 35 வரை
2) கல்வித்தகைமை : க. பொ. த. (சாதாரண தரத்தில்) 6 பாடங்கள். தமிழ், கணிதம்/எண் கணிதம் உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தி. அல்லது க. பொ. த. (உயர் தரம்)
3) உயரம் : 5' 6''

### 02) காவலர் தரம்.

1) வயது : 18 – 35 வரை
2) கல்வித்தகைமை : க.பொ.த. (சாதாரண தரத்தில்) தமிழ், கணிதம்/எண் கணிதம் உட்பட 6பாடங்கள் சித்தி.
3) உயரம் : 5' 6''

பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை

[சி/1904]

## நீதிமன்ற அமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 19

சாவகச்சேரி தமிழீழ மாவட்ட நீதிமன்றில் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகள் மீண்டும் கடந்த 17ஆம் திகதி தொடக்கம் வழமைபோல் நடைபெற்று வருகின்றன என்பதை வழக்குகளில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தமிழீழ நீதி நிர்வாகத்துறையினர் அறியத் தருகின்றனர். (ஓ)

## உயர்தர பரீட்சையை ஒத்திவைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 19

இம்மாதம் 31 ஆம் திகதி ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ள ஜி. சி. ஈ உயர்தர பரீட்சையை ஒத்திவைக்குமாறு யாழ்ப்பாணத்தின் இரண்டு கல்வி வலயங்களின் பணிப்பாளர்களும் பரீட்சை ஆணையாளரிடம் கேட்டுள்ளனர்.

"முன்னேறிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கையால் வலி - மேற்கு, வலி - வடக்கு பகுதிகளில் 150 பாடசாலைகள் மூடப்பட்டும். 2, 500 ஆசிரியர்களும் 60, 000 மாணவர்களும் இடம்பெயர்ந்தும் உள்ளனர். —

உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த 3, 500 மாணவர்களும் இடம் பெயர்ந்துள்ளனர் —

பரீட்சை நிலையங்களாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் அகதிமுகாம்களாக மாறியுள்ளன — என்பதால் யாழ் மாவட்டத்தில் பரீட்சையை நடத்த முடியாது என்று பரீட்சை ஆணையாளருக்கு கல்விப் பணிப்பாளர்கள் மகஜர் மூலம் எடுத்து விளக்கி உள்ளனர். (அ)

## சுகாதார கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனையில் இன்று புதன் பிற்பகல் 2 மணிக்கு பொதுச் சுகாதாரக் கூட்டம் நடைபெறும் என மாகாண பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

சகல சுகாதாரக் கூறு பொறுப்பதிகாரிகளையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஓ)


யா/ அருள்மிகு
இலங்கைநாயகி மனோன்மணி அம்பாள் கோவில்

## மஹோற்சப விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

நாளை (20 - 07 - 95) வியாழக்கிழமை துவஜாரோகணமாகி (கொடியேற்றம்) தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் மஹோற்சபம் நடைபெறும் என்பதை அம்பாள் அடியார்களுக்கும் திருவிழா உபயகாரர்களுக்கும் அறியத்தருகிறோம்.

மஹோற்சப குரு
பிரம்மஸ்ரீ சி. மனோகரராஜக்குருக்கள்
(ஆலய பிரதம குரு)

இங்ஙனம்
சு. பாலசுப்பிரமணிய ஐயர்
ஆலய உரிமையாளரும், ஆதீனகர்த்தாவும்.
பொ. கிருஷ்ணமூர்த்தி சர்மா
ஆலய நிர்வாகம் [37613]

யாழ். ஸ்ரீதர் அகலத் திரையில்
தினசரி 2 30
ஞானரதனின்
★ முகங்கள் ★
(சமூகச் சித்திரம்)
தினசரி 4- 30
கடற்கரும்புலிகளின் வீரசாதனை
உயிராயுதம் பகுதி III
தினசரி 6- 30
சனி, ஞாயிறு 10- 30 – 6- 30
MILTON MORRIS ........
THE HARD WAY
(தாக்குதல் சித்திரம்)
(சி-1700)

## கண்ணீர் அஞ்சலி

மட்டுக்கோட்டையைச் சேர்ந்த சிற்பகலைஞன்
கந்தையா சபாரத்ணத்தின் தாயார்

### திருமதி கந்தையா

அவர்களின் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

அன்னாரின் பிரிவால் ஆறாத்துயர் அடையும் சபாரட்ணம் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

இங்ஙனம்,
ஸ்தபதி
செ. பாலச்சந்திரனும் ஸ்ரீ காளிகா
சிற்பாலய கலைஞர்களும்
(37615)

## கண்ணீர் அஞ்சலி

பெற்ற பிள்ளைகளுக்கு அன்புத் தெய்வமாய்,
கட்டிய கணவருக்கு உற்ற துணைவியாய்,
கற்பித்த மாணவர்களுக்கு அறிவு உருவமாய்,
உடன் ஆசிரியர்களுக்கு உற்ற நண்பியாய்

வாழ்ந்து அமரநிலை எய்திய

### திருமதி
### சுசீலாதேவி செல்வேந்திரா

(கணித ஆசிரியை, மயிலணி சைவ மகா. வித்தியாலயம்)

அவர்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலிகள்

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்,
சுன்னாகம். [37608]

## விற்பனைக்கு

யாழ் மாநகரசபை எல்லைக்குள்ளான ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி, கே. கே. எஸ். வீதி. ஆகிய வீதிகளில் கடைகளும், யாழ். மாநகர எல்லைக்குள் சகல வசதிகளும் கூடிய வீடுகளும் விற்பனைக்குண்டு!

தொடர்பு:
கனகசபை தர்மகுலசிங்கம்
"விற்பனை முகவர்"
சிவன் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

பழமுதிர் சோலை
நாரைநகர்.
[37610]


## அறிவித்தல்

யாழ் பல்கலைக்கழகம் தனது நாளாந்தக் கடமைகளை ஆற்றத் தொடங்கியுள்ளதால் பல்கலைக்கழக சகல உத்தியோகத்தர்களும் நாளை தொடக்கம் வேலைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

— பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்
1995-07-18 (சி-1901)


## கண்ணீர் அஞ்சலி

அகால மரணமடைந்த கிராம அலுவலர்கள்

திரு. கபிரியேல்பிள்ளை
திரு. வே. வன்னியசிங்கம்
செல்வி. ஹேமலதா செல்வராசா

ஆகியோருக்கு எமது மனம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதுடன் அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

வலிமேற்கு பிரதேச செயலக
ஊழியர் நலன்புரி சங்கம்.
சங்கானை. [37606]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறிச்சோடி மயானம் போன்று காட்சி தரும் அளவெட்டிப் பகுதி

அளவெட்டி, ஜூலை 19

இராணுவம் விரட்டி அடிக்கப்பட்ட அளவெட்டிப் பகுதி வெறிச்சோடி மயானம்போல் காட்சி அளிக்கிறது.

கேணிவத்தைச் சந்தி, அடலம்பற்று பிள்ளையார் கோயில் முனை மலை, வேம்படி சந்தை ஆகியவற்றுக்கு அருகில் சடலங்கள் எரிக்கப்பட்டு கருகிய நிலையில் காணப்படுகின்றன. இதனால் துர்நாற்றம் வீசுகிறது.

இதனிடையில் சாக்கினால் உருவாக்கப்பட்ட கல்வசில் ஒரு பெண்ணின் சடலம் உருக்குலைந்த நிலையில் கிடத்தப்பட்டு கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

இதனை உறவினர்கள் எவரோ தூக்கிவரும்போது இராணுவத்தைக்கண்டு அப்படியே போட்டுவிட்டு ஓடியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இராணுவம் பல வீடுகளில் தங்கியிருந்து சமைத்துச் சாப்பிட்ட அடையாளங்கள் தென்படுகின்றன.

ஒருவீட்டுக் கதிரை, கட்டில் என்பன இன்னொரு வீட்டிலும் வீதியிலுமாக காணப்படுகின்றன.

வீடுகள் யாவும் உடைத்து சல்லடைபோட்டுத் தேடுதலும் இடம்பெற்றுள்ளது.

மக்கள் தமது வீடு வாசல்களைப் பார்ப்பதற்கும், உடமைகளைப் பார்ப்பதற்கும் ஆவலுடன் சென்றபோதும் இடைக்கிடை ஷெல் தாக்குதல் இடம்பெறுவதால் ஏமாற்றத்துடன் திரும்புகிறார்கள்.

சந்தரோடை உத்திமிக்கை வயல் வெளிகளில் பல சடலங்கள் இன்னமும் உரிமை கோராமல் கிடக்கின்றன.

அளவெட்டிப் பகுதிக்குள் நுழையும் போது ஒருவித பீதியும் மனக்கிலேசமும் ஏற்படுகிறது. துர்நாற்ற வாடை இனந்தெரியாத பயத்தை உருவாக்குகிறது. தோட்டப் பயிர்கள், வாழை, மரவள்ளி, குரக்கன், வெங்காயம் போன்ற சிறுதானியப் பயிர்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இராணுவம் விட்டுச் சென்ற பகுதிகளில் கூட மக்கள் சென்று மீளக்குடியேற அஞ்சுகிறார்கள். [இ-13]

## நவாலி - கல்லுண்டாய் வீதிகளில் மக்கள் கூட்டம்

வட்டுக்கோட்டையிலிருந்து ராணுவம் பின் வாங்கியதைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான மக்கள் வட்டுக்கோட்டைக்கு நவாலி ஊடாகவும், கல்லுண்டாய் வெளி ஊடாகவும் சென்று கொண்டிருக்கிறார்கள்.

இப்படியானவர்கள் வட்டுக்கோட்டையில் தங்காமல் மூடை முடிச்சுகளுடன் அன்றே திரும்பிக்கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

பலர் லாண்ட்மாஸ்டர்களிலும், வண்டில்களிலும் தமது பொருள்களை ஏற்றி வருகின்றனர்.

வட்டுக்கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் வருவதற்கு லாண்ட்மாஸ்ரர் கூலி மட்டும் ஆயிரம் ரூபா அறவிடப்பட்டது.

[இ-க]

## சைக்கிளை தூக்கி கொண்டு சேற்றில் செல்கின்றனர்

அராலிப் பாலம் தகர்க்கப்பட்டிருப்பதால் கல்லுண்டாய் வழியாக வட்டுக்கோட்டை மற்றும் அராலிக்கு கனரக வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சைக்கிளில் செல்வோர் சைக்கிளைத் தூக்கிக் கொண்டு சேற்று நீரில் நடந்தே பெரும் சிரமத்தின் மத்தியில் பாலத்தைக் கடக்கிறார்கள்.

[இ]

## கனத்த மடியுடன் வீதியில் அலையும் கால்நடைகள்

ராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்தவர்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே தமது கால் நடைகளையும் தம்முடன் எடுத்து வந்திருந்தனர். பெரும்பாலானோர் தமது விலையுயர்ந்த பொருள்களைக் கூட எடுக்க அவகாசம் கிடையாது ஓடித்தப்பி வந்திருந்தனர்.

இப்படிக் கைவிட்ட கால்நடைகள் வீதிகளில் அலைந்து திரிகின்றன. பால் கறப்போர் இல்லாததால் ஆடு மாடுகள் கனத்த மடியுடன் காணப்படுகின்றன. தண்ணீர் இன்றி அலையும் கால்நடைகள் ஆட்கள் உள்ள வீடுகளில் வந்து தஞ்சம் அடைகின்றன.

இடம் பெயர்ந்த மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பியதும் முதல் வேலையாக தமது கால் நடைகளைத் தேடிப் பிடித்து அவற்றுக்கு உணவு தண்ணீர் வைக்கிறார்கள்.

(இ-க)

## கோழிகளைத் தின்று ஏப்பம் விட்ட படையினர்

படையினர் தாம் தங்கியிருந்த ஒரு சில நாட்களில் பெரும் எண்ணிக்கையான கோழிகளை தின்று ஏப்பம் விட்டுள்ளனர்.

வீட்டு வளவுகளில் கோழிகளின் தலைகளும், கால்களும் கிடந்து துர்நாற்றம் வீசுகின்றன.

இடம் பெயர்ந்தவர்கள் தமது வீடுகளுக்குத் திரும்பிச் சென்றபோது துர்நாற்றமே அவர்களை முதலில் வரவேற்றது மண்வெட்டியைப் பயன்படுத்தியே கோழிகள் உரிக்கப்பட்டிருந்தன.

இடம் பெயர்ந்தவர்களின் சில வீடுகளில் பெறுமதி மிக்கப் பொருள்கள் நகைகள் திருடப்பட்டுள்ளன.

(இ-க)

## காயமடைந்த தாயாரை ஏற்றி வந்தவர் எங்கே?

நவாலி, ஜூலை 19

துப்பாக்கிச் சூட்டுக் காயத்தினால் வேதனைப் பட்டுக்கொண்டிருந்த தனது தாயாரை சைக்கிளில் ஏற்றிக் கொண்டு வந்த நபரை சுழிபுரத்தில் வைத்து படையினர் பிடித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

ராணுவ நடவடிக்கையின் போது அச்செழுவில் இருந்த பிரஸ்தாப நபர் அச்செழுவில் இருந்து சம்பவதினம் சுழிபுரம் சென்று தாயாரைத் தேடிய போது தாயார் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் வேதனைப் பட்டுக் கொண்டிருந்தார் என்றும்—

தாயாரை சைக்கிளில் ஏற்றிக் கொண்டு வருகையில் சுழிபுரத்தில் வைத்து இராணுவம் அவரைப் பிடித்துச் சென்றுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

செல்வன் தெய்வேந்திரன் (வயது 25) என்ற இந்த நபர் குறித்த தகவலைப் பெறுவதற்காக உறவினர்கள் செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

(இ-100)

## சமையல் பாத்திரங்களை தேடி அலையும் மக்கள்

இடம்பெயர்ந்த மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பிச் சென்ற போது சில இடங்களில் சமையல் பாத்திரங்கள், பிளாஸ்டிக் வாளிகள், கிணற்று வாளிகள் காணாமற்போய் இருந்தன.

ஒரு வீட்டுப்பாத்திரங்கள் இன்னும் ஒரு வீட்டில் கிடந்ததால் இடம்பெயர்ந்து தமது வீடுகளுக்குத் திரும்பியவர்கள் தமது பாத்திரங்கள், வாளிகளைத் தேடி அக்கம் பக்கத்து வீடுகளுக்கு அலைய வேண்டியதாயிற்று.

வீட்டுக்காரர்கள் சென்று ''இது உங்கடை'' ''இது எங்கடை'' என்று கூறி பாத்திரங்கள், வாளிகளை எடுத்துச் செல்வதைக் காணக் கூடியதாக இருக்கிறது. (இ-க)

## வெறுமையான கூட்டில் 125 க்கு மேல் கோழிகள்

### வீட்டுக்காரர் ஆச்சரியம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

ராணுவ நடவடிக்கை இடம்பெற்ற அளவெட்டிப் பகுதியில் 50க்கு மேற்பட்ட மாடுகள் வயல்களிலும், வீதிகளிலும் இறந்து கிடக்கின்றன.

கட்டியிருந்த கால்நடைகள் பலவற்றை ராணுவத்தினர் அவிழ்த்து விட்டதால் நூற்றுக்கணக்கான மாடுகள் வயல் வெளிகளில் கூட்டம், கூட்டமாகக் காணப்படுகின்றன.

பலரின் வீடுகளில் கோழிகள் காணாமற் போய் உள்ளன.

அளவெட்டி தெற்கில் உள்ள வீடு ஒன்றின் கூட்டுக்குள் 125 க்கு மேற்பட்ட கோழிகள் அடைக்கப்பட்டிருந்ததை அந்த வீட்டின் சொந்தக்காரர் கண்டு ஆச்சரியம் அடைந்தார். அவர்இடம் பெயர்ந்தபோது அந்தகூட்டில்ஒரு கோழியாவது இருந்ததில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-13)

## பொருள்களுக்கு தட்டுப்பாடு

வட்டுக்கோட்டைப் பகுதியில் கடைகள் திறக்கப்படாத நிலையில்பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. இறைச்சி, மீன் கிடைக்கவே கிடையாது. மக்கள் அங்கும் இங்கும் மரக்கறி தேடி வாங்குகின்றார்கள். சங்கானைத் தோட்டம், கொட்டைக்காட்டுத் தோட்டம் ஆகியவற்றிலிருந்து மரகறிகள் சிறிது கிடைக்கின்றன.

வீடுகள் உடைந்த செய்தியும், ஆட்கள் இறந்த செய்தியும், வானொலிப் பெட்டிகள் திருட்டுப் போன செய்தியுமே மக்கள் மத்தியில் அடிபட்டுக் கொண்டிருக்கின்றன. சில கடைகள உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

[இ-க]

## வெடிக்காத நிலையில் ஷெல்

நவாலி, ஜூலை 19

நவாலி சென்பீற்றேஸ் தேவாலயத்திற்கு அருகாமையில் வெடிக்காத நிலையில் ஷெல் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது, (எ-100)

## முருகன் ஆலயமும் முற்றாகச் சேதம்

அண்மையில் நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயம் மீது புக்காரா விமானம் குண்டு வீசி அழித்த சம்பவத்தில், நவாலியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற கதிர்காமக் கந்தன் ஆலயமும் முற்றாக சேதமாக்கப்பட்டுள்ளது.

கதிர்காமக் கந்தன் ஆலய சுற்றாடலில் அமைந்துள்ள 10க்கும் மேற்பட்ட வீடுகளும் மற்றும் கட்டடங்களும் பலத்த சேதமடைந்துள்ளன.

கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து இன்னமும் துர்நாற்றம் வீசுவதாகத் தெரிவிக்கப் படுகிறது. (எ-100-51)

## கூமுனையிலிருந்து மக்கள் இடம் பெயர்வு

அம்பாறை மாவட்டத்தில் உள்ள காட்டுப் பகுதிகளில் அடிக்கடி இராணுவ நடவடிக்கைகள் இடம் பெறுவதை அடுத்து, கூமுனை பிரதேச மக்கள் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர்.

இவர்கள் பாணமை திருக்கோவில், அக்கரைபற்று பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

இதேவேளை அம்பாறை எல்லைப் பிரதேசங்களில் ஊர்காவல் படையினரும் இராணுவத்தினரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர், (எ)

## தேசிய அடையாள அட்டைகள்

மாஹோ கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள 3 ஆயிரம் தேசிய அடையாள அட்டைகளும் யாழ். செயலகத்தில் வைத்து தரம் பிரித்து பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளன.

சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்தவர்களது அடையாள அட்டைகள் நல்லூர் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் தற்காலிகமாக இயங்கும் இப்பிரதேச செயலகங்களில் வழங்கப்படும்.

## ஷெல் வீச்சில் கோயில் சேதம்

வட்டுக்கோட்டையில் அடைக்கலம் தோட்டம் கந்தசாமி கோயில் கூரைகள் ஷெல் வீச்சு, குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகி ஓடுகள் அனைத்தும்உடைந்து சிதறியுள்ளன.

இரண்டாம் வீதியில் நின்ற கோயில் பூசகரின் பால்மாடும் கன்றும் அங்கே இறந்து கிடந்தன. (க)

# குடாநாடு மீதான ராணுவ நடவடிக்கை செப்ரெம்பர் வரை தொடருமாம்

## கொழும்பு வார இதழ் தகவல்

கொழும்பு, ஜூலை 19

''யாழ். குடாநாட்டின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கை, செப்ரம்பர் மாதம் வரை —மழைகாலம் தொடங்கும் வரை — தொடரும்''

இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி, கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று இத் தகவலை வெளியிட்டுள்ளது.

[illegible] தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒன்றன்பின் ஒன்றாகப பாரியப டை நகர்வுகள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் நடைபெறும்.

அதன் பின்னர் இராணுவம் குடாநாட்டில் தன் நிலைகளைப் பலப்படுத்தி பரவலாகக் காலூன்றும்.

தற்போது புலிகள் வசம் உள்ள கரையோரம் பிரதேசம் எனச் சொல்லக் கூடிய தொண்டமனாறில் இருந்து [illegible] கோவில் வரையிலான பிரதேசத்தை புலிகளின் கைகளில் இருந்து பறித்து எடுத்து விட்டால், கடற்புலிகளின் அச்சுறுத்தல் இல்லாமற் போய்விடும் என்பது அரசின் கணிப்பு.

கரையோரத்தை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தால் அராலி ஊடாகவும், கல்லுண்டாய், பொம்மை வெளி ஊடாகவும், யாழ். நகரைக் கைப்பற்றி விடலாம் என்பதே இராணுவத்தின்திட்டம் இவ்வாறு அந்த பத்திரிகைமேலும்தெரிவித்தது.

(எ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

*விற்பனைக்கு*

மரக்கதிரை பின்னும் வயர் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. ராஜன் பின்னலகம், 286, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம் சந்தி]. [37596]

பூட்டிக் கழட்டாதயானை மார்க் அஸ்பெஸ்ரஸ் கூரை தகடு 12 அடி ஏழு, 10 அடி பதினான்கு, 9 அடி இரண்டு விற்பனைக்குண்டு. இல: 55 சினியர் லேன் கலட்டி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் [37604]

*விசேஷ அன்ரனா*

ரூபவாஹினி, மட்றாஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு விசேஷ T.V. அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல் T.V. செட், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டிக்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம் சந்தி], யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-1687]

*மணப்பெண்கள் தேவை*

குற்றமற்ற 35 வயது (கார்த்திகை 3) USA உயர் உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கும், 37 வயது மேற்கு ஜேர்மனிக்கும் தேவை. தொடர்பு: மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [37587]

*காணவில்லை*

7-7-95 வெள்ளிக்கிழமை முதல் கறுப்பு நிற ஜேர்மன் செபேட் பெண் நாய் (ஒன்றரை வயது) மானிப்பாயில் காணவில்லை. வைத்திருப்போர் தயவுசெய்து த.வைத்தீஸ்வரன், மே/பா ஏ. ஏ.தெய்வேந்திரராஜா, அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு என்னும்முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (37583)

## ஊர்காவற்றுறை கோட்ட அதிபர்களுக்கு

ஊர்காவற்றுறைக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று காலை 10 மணிக்கு யாழ், சென்ஜோன்ஸ் அக்கடமியில் நடைபெறவுள்ளதாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுப் பட்டமளிப்பு விழா - 1995

1995-07-29 ஆம் திகதி நடைபெற இருந்த பொதுப்பட்டமளிப்பு விழா தற்போதைய சூழ்நிலை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது இது பற்றிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

— பதிவாளர்.

1995 - 07 - 17

[சி-1692]

## முக்கிய அறிவித்தல்

வியாழக்கிழமையிலிருந்து (20 - 07 - 1995) சகல வகுப்புகளும் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும்.

விக்னா கல்வி நிறுவனம்

[சி/1698]

## எடிசன் அக்கடமி

யாழ்ப்பாணம் — கொக்குவில்

எமது இரு நிறுவனத்தின் மாணவ, மாணவிகளும் 20 - 07 - 95 வியாழன் பி.ப. 4 மணிக்கு நிறுவனத்தில் கூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆசிரியர்களும் இத்தினம் சமுகமளிக்கவும்,

நிர்வாகத்தினர்,
எடிசன் அக்கடமி.

(சி-1690)

## BECON

## கல்வி நிறுவனம்

யாழ்ப்பாணம்

* **A/L 95** பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் எமது நிறுவன மாணவர்கள் அனைவரும் 20-07-1995 வியாழன் காலை 8-00 மணிக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.
* எமது நிறுவனத்தில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் அன்றைய தினம் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இயக்குநர்,
BECON கல்வி நிறுவனம்.

(சி-91697)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேஷ்டியும்



| உதயம்: | அஸ்தமனம்: |
|---|---|
| 22 — 02 — 1922 | 19 — 06 — 1995 |

### அமரர் நல்லதம்பி வீரசிங்கம்

(விஷக்கடி வைத்தியர்)
[வரணி-நாவற்காடு]

திதி: 19 – 07 – 1995

ஆருயிர்த்துணைவராய் ஆன்றவிந்தடங்கிய சான்றாண்மை மிக்க அப்பனாய்-பாசமழை மொழிந்த பரிவாரு மாமனாய் வையத்துள் வாழ்வாங்குவாழ்ந்து வழிகாட்டிய எங்கள் குல தெய்வமே!

உங்கள் அன்பும், பண்பும் கனிவும் ஈடு இணையற்ற திருப்பணிச் செயல்களும் எங்கள் இதயங்களை விட்டு என்றும் அகலாதனவாகும்.

உங்கள் ஆன்மா இறைவனில் என்றும் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று அவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேஷ்டியில் பங்குபற்றி அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை வேண்டுகின்றோம்.

— மனைவி, மக்கள், மருகர், குடும்பத்தார்

தகவல்
வீ. தில்லை நடராசாவும்,
வீ. சடாட்சரமும்
நாவற்காடு-வரணி [37592]

## வலிகாமம் கொத்தணியின் பணிகள் மீண்டும் மானிப்பாயில்

தற்காலிகமாக இடம் மாறிய வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் பணிகள் மீண்டும் நடுவப் பணியகம் மானிப்பாயில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பதைச் சகல தொடர்புள்ளவர்களுக்கும், பணியாளர்களுக்கும், பயிற்சியாளர்களுக்கும் தெரியப்படுத்துகின்றேன்.

நன்றி

இங்ஙனம்
கூட்டுறவுச் சேவையிலுள்ள
பொது முகாமையாளர்.

வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச. கொத்தணி
நடுவப் பணியகம்,
மானிப்பாய். [சி-1699]

## தென்மராட்சிப் பிரதேச செயலக கிராம அலுவலர்களின் கண்ணீர் அஞ்சலிகள்

09 - 07 - 1995 ஆம் திகதி நவாலியில் அகால மரணமடைந்த சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கிராம அலுவலர்கள்

**செல்வி ஹேமலதா செல்வராசா**
**திரு. பி. கபிரியேல்பிள்ளை**
ஆகியோருக்கும்

மூளாயில் அகாலமரணமடைந்த தெல்லிப்பளை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கிராம அலுவலர்

**திரு. வே. வன்னியசிங்கம்**
அவர்களுக்கும்

எங்கள் மனம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன், அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எங்கள் இதய பூர்வமான அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களது ஆத்மா சாந்தியடைய நாம் பிரார்த்திக்கின்றோம்.

தென்மராட்சிப் பிரதேச செயலக
கிராம அலுவலர்கள்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி.
12-07-1995 [37605]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி
### சிவசௌந்தரி சுந்தரமூர்த்தி
[லட்சுமி]

| தாய் மடியில்: | கண்ணன் திருவடியில்: |
|---|---|
| 18 — 06 — 1964 | 19 — 06 — 1995 |
| மடத்தடி, கிளாலி | குடமியன், வரணி |

அன்பின் திருவுருவே
கண்ணன் பாதமலரை
உன் அகமலரில் வைத்தாய்
இந்த மாயை இருளை நீக்கி
மெய்ஞ்ஞான ஒளியில் சேர்த்தாய்
அறியாப் பாவிகள் என்றும் கலங்குகின்றோம்

உன் ஆத்மா சாந்தியடைய கண்ணனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் வாடும்;

அன்புத் தந்தை, தாய், சகோதரர்,
சகோதரிகள், கணவன், பிள்ளைகள்,
மாமா, மாமி, மைத்துனர், மைத்துனிகள்
மற்றும் உற்றார், உறவினர்கள்.

[சி/1695]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## உண்மையும் தர்மமும்

"முன்னேறிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கை மூலம் வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்குப் பகுதிகளுக்கு முன்னேறி வந்த வேகத்திலேயே —

ஸ்ரீலங்கா இராணுவத்தை விடுதலைப் புலிகள் அப்பகுதிகளில் இருந்து துரத்திவிட்டனர்.

இராணுவம் விரட்டப்பட்ட பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் பெரும்பாலானோர் நேற்றுத் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

ஆனால் அரசாங்கத் தரப்பில் — இராணுவத் தரப்பில் — தமது பின்னடைவு, தோல்வி குறித்து நேற்று இரவு வரை எதுவும் அறிவிக்கப்படவில்லை.

மாறாக தாம் ஆக்கிரமித்த பகுதியில் இருந்து ஓர் அங்குலம் தானும் பின்னே கால் வைக்கவில்லை என்றும், தமது இராணுவ நடவடிக்கை தொடர்கிறது என்றும் சிங்கள மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

முழுப் பூசினிக்காயை சோற்றில் புதைத்து மறைத்து விட முடியாது என்பதனை இந்தக் கோயபல்சுகள் இன்னும் உணரவில்லை. அதனால் தான் யாழ்ப்பாணம் வந்து உண்மை நிலையை எடுத்துக்கூற விரும்பும் கொழும்பில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள்.

நவாலி தேவாலயத்தில் நடந்ததை நடந்ததுபோலவே அறிக்கை வெளியிட்டது செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு. அதற்காக கொழும்பில் உள்ள செஞ்சிலுவை அதிகாரியை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தமது அமைச்சுக்கு அழைத்து வெல் வெருட்டு காட்டியதும் உண்மை வெளிவந்து விட்டதே என்ற ஆத்திரத்தில் தான். இத்தகைய சேட்டைகளால் உண்மையை எத்தனை நாளைக்கு மறைக்க முடியும்?

பொய்ப்பிரசாரத்தால் தாம் நினைப்பதை நடத்தி விடலாம் அல்லது அடைந்து விடலாம் என்று எண்ணிச் செயற்படும் சந்திரிகாவும் அவரது சகாக்களும், அதிகாரிகளும் அடிலேக பூரண குருவையும் சீடர்களையும் நினைவுபடுத்துகின்றனர்!

யாழ்ப்பாண மக்களுக்கு விடுதலை கொடுப்பதாகக் கூறிக்கொண்டு அவர்களை அழித்தொழிக்கும் உண்மை வெளியே தெரிந்து விட்டது என்பதற்காக —

விடுதலைப் புலிகளும் தமது சொந்த மக்களை அழிக்கிறார்கள் என்ற மூன்றாந்தரப் பிரசாரத்தை அரசு தொடங்கியுள்ளது! தாவடியில் விடுதலைப் புலிகளின் குண்டு வெடிப்பில் 150 பொதுமக்கள் கொல்லப்பட்டு விட்டனர் என்பது அத்தகைய மூன்றாந்தரப் பிரசாரத்தில் ஒன்றே!

போரை நடத்துவதைவிட பொய்ப்பிரசாரப் போரை நடத்துவதிலேயே ஸ்ரீலங்கா அரசினரும், அதிகாரிகளும் திறமைசாலிகளாக விளங்குகின்றனர்.

தமிழர்கள் பொய்ப் பிரசாரம் செய்யவில்லை. உள்ளதையே சொல்கிறார்கள். அவர்கள் தமது விடுதலைக்கான தர்ம யுத்தத்திலேயே ஈடுபட்டுள்ளனர். எப்போதும் தர்மமும், உண்மையுமே வெல்லும். அதனால் தமிழர்களே வெல்வர் என்பது நிச்சயம். சந்திரிகா இதனை எப்போது உணரப்போகிறார்?

---

### காவல் பணிமனை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போனோர், சொத்துக்கள், உடைமைகள் சேதம், கலவு சம்பந்தமான முறைப்பாடுகள் யாவற்றையும் சங்கானை, சுன்னாகம், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள காவல் பணிமனைகளில் பதிவு செய்து கொள்ளுமாறு பொது மக்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சண்டிலிப்பாய், மாசியப்பிட்டி, சங்கானை, சித்தன்கேணி, அரியுரம், பண்ணாகம், வட்டுக்கோட்டை, அராலி, தொல்புரம், மூளாய், வட்டுக்கம்பிராய், சங்கரத்தை ஆகிய பிரதேசங்களில் உள்ள மக்கள் சங்கானை காவல் பணிமனையிலும் —

அளவெட்டி, மல்லாகம், சுன்னாகம், தெல்லிப்பளை, உடுவில், கந்தரோடை ஆகிய பிரதேசங்களில் உள்ள மக்கள் சுன்னாகம் காவல் பணிமனையிலும்,

ஆனைக்கோட்டை, மானிப்பாய், நவாலி போன்ற பிரதேசங்களில் உள்ள மக்கள் யாழ். காவல் பணிமனையிலும் தமது முறைப்பாடுகளை பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் — [ஒ]

### களுத்துறை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வும் —

பல வீடுகள் தாக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து முழு விசாரணை நடத்தும்படி ஜனாதிபதி சந்திரிகா பொலிஸ் மா அதிபரை பணித்துள்ளார். [உ-எ-6]

### படை ஆக்கிரமித்த---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பனை, தென்னை போன்ற பயன்தரு மரங்கள் வேரோடு வீழ்த்தப்பட்டுள்ளன; தோட்டங்கள், துரவுகள் அழிக்கப்பட்டுள்ளன.

நூற்றுக் கணக்கில் கொல்லப்பட்ட கால்நடைகள் ஆங்காங்கே கிடந்து அழுகுவதால் துர்நாற்றம் வீசுகின்றது.

வீதிகள் வயல்களாக

ஏற்கனவே நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் கிடந்த வீதிகள் டாங்கிகளின் சதிராட்டத்தால் முற்றாக நாசமாகிப் போய், உழுத வயல்கள் போல காட்சியளிக்கின்றன.

பல வீடுகள் படையினரால் சூறையாடப்பட்டு, பெறுமதி மிக்க பொருள்கள் அள்ளிச் செல்லப்பட்டுள்ளன. எஞ்சிய பொருள்கள் வீட்டுக்கு வெளியே காணிகளிலும், வீதிகளிலும் வீசப்பட்டுக் கிடந்தன.

மொத்தத்தில் இராணுவக் கொள்ளையர்கள் நடமாடிய இடமெங்கும் சீரழிந்து காணப்படுகின்றன.

தேவாலயங்கள், கோவில்கள், பாடசாலைகள் போன்ற பொது இடங்களும் வர்த்தக நிலையங்களும் கூட படையினரின் நாச வேலைகளுக்குத் தப்பவில்லை.

வர்த்தக நிலையங்களைச் சூறையாடிய படையினர் — அங்கிருந்த அரிசி, நெல், செத்தல் மிளகாய் பருப்பு, உழுந்து போன்றவை நிரம்பிய — மூடைகளைக்கூட சந்திகளுக்கு கொண்டு வந்து "சென்றி" அமைத்திருக்கின்றனர்.

இராணுவத் தர்பார்

வட்டுக்கோட்டை தென்னிந்தியத் திருச்சபையின் தேவாலயப் பகுதி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றில் தங்கியிருந்த படையினர் அப்பகுதிகளில் பெரும் சேதங்களை ஏற்படுத்தி உள்ளனர். இவை இராணுவ தர்பார் நடந்த பிரதேசமாக அப்பகுதி விளங்குகின்றது.

தேவாலய வளாகத்தினுள்ளும் கல்லூரியைச் சூழவுள்ள வீதிகளிலும் கவச வாகனத் தடயங்களே காண முடிகிறது.

யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் 9 இடங்களில் வட்ட வடிவமாக நிலை அமைத்து படையினர் மோட்டார் ஷெல்களை வைத்திருந்ததாக அப்பகுதியில் சிக்குண்டிருந்த ஒருவர் தெரிவித்தார்.

தென்னிந்திய திருச்சபை யாழ். பேராயர் அதி. வண. ஜெபநேசனின் கார் சேதமாக்கப்பட்டுள்ளது.

தேவாலய வளாகத்தினுள் பொருள்களை படையினர் அங்கும் இங்குமாக வீசியுள்ளனர்.

படையினரின் உணவுப் பொதிகளின் உறைகள் அப்பகுதி எங்கும் ஏராளமாகக் காணப்பட்டன.

தேவாலய வளாகத்தினுள்ளும், கல்லூரி வளாகத்தினுள்ளும் சில இடங்களில் ஷெல்கள் வெடித்துள்ளன.

வைத்தியசாலையிலும் அட்டகாசம்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்குள் புகுந்தபடையினர் அங்கும் பெரும் அட்டகாசம் புரிந்துள்ளனர்.

வைத்திய சாலையில் இருந்த உபகரணங்கள் அனைத்தும் தாறுமாறாக வீசப்பட்டுக் கிடந்தன.

மருந்துப் பொருள்கள் அனைத்துமே தரையில் கொட்டி நாசமாக்கப்பட்டுள்ளன.

வைத்திய சாலை வளாகத்தின் சுவர்கள் இடிக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலைக்கு முன்பாகச் செல்லும் பிரதான வீதியில் உள்ள கடைகளில் இருந்து பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.

இராணுவத்தினர் தமது பகுதிகளில் ஏற்படுத்திய அழிவுகளைப் பார்த்த பின்னர், தமது சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பிய மக்கள் பலர் இடம்பெயர்ந்த இடங்களுக்குத் திரும்பிவிட்டனர்.

[உ-ஐ-4-15-175-13]

### படையினர் எங்கே இருக்கிறார்கள்?

# நேரில் அழைத்துச் செல்ல முடியாது; தொலைக்காட்சியில் காட்டுகிறோம்!

## செய்தியாளர்கள் கேள்விக்கு அனுருத்த பதில்

கொழும்பு, ஜூலை 19

"செய்தியாளர்களை வடபகுதிக்கு நேரடியாக அழைத்துச் செல்ல முடியாது; அங்குள்ள நிலைமை பற்றி தொலைக்காட்சியில் தான் நேரடியாகக் காட்டுகின்றோமே!"

பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போது "படையினர் இன்னமும் பலாலியில் தான் இருக்கிறார்களா என்பதை நேரடியாகப் பார்க்க அங்கு எங்களை அழைத்துச் செல்லுங்கள்" என்று பத்திரிகையாளர்கள் அமைச்சரை வற்புறுத்தினர்.

அதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடபகுதி நிலவரம் பற்றி கொழும்பில் அரச தரப்பினர் வெளியிடும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என்பது தென் இலங்கைப் பத்திரிகையாளர்களுக்குத் தெரிய வந்துள்ளது என்றும் —

இதனால், அவர்கள் தம்மை வடபகுதியில் யுத்தம் நடைபெறும் இடங்களுக்கு அழைத்துச் செல்லும்படி அரசை வற்புறுத்தி வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது. (எ-3)

### தமிழகத்தில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காத் தூதரகத்தின் முன்னால் அவரது கட்சியினர் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதன் பின்பு பி.பி.ஸிக்கு பேட்டியளித்த போதே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

உடனடியாக யுத்தத்தை நிறுத்தவேண்டும்; விடுதலைப் புலிப் போராளிகளுடன் பேச்சு நடத்தவேண்டும்; பேச்சு மூலம் அரசியல் தீர்வு காணவேண்டும். — ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாக அவர் கூறினார்.

உலகத் தமிழர்கள் இந்த போருக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (உ-3)

### அகதி முகாம்களில் தங்கியிருந்து

## மீளத் திரும்பியோருக்கு ஒரு வார கால நிவாரணம்

வலி. மேற்கு, வலி. வடக்கு பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியபின் மீள தமது இருப்பிடங்களுக்கு திரும்பியவர்களுக்கு ஒரு வாரத்துக்குரிய உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும் என்று யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

தற்போது தங்கியுள்ள முகாம்களில் தொடர்ந்து தங்க விரும்பும் அகதிகள் முகாம்களில் தங்கலாம் என்றும் —

அவர்களுக்கு தேவையான வசதிகள் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதுள்ள 79 முகாம்களில் உள்ள இடம்பெயர்ந்தவர்கள் மீளத் திரும்பும் பட்சத்தில் சில முகாம்களை இணைத்து அவற்றின் எண்ணிக்கை குறைக்கப்படும் — என்றும் அவர் சொன்னார். [உ-3]

## ராணுவ ஜீப்பில் புலிகள் கொழும்புக்குள் ஊடுருவல்

கொழும்பு, ஜூலை 19

இராணுவச் சீருடை அணிந்து, இராணுவ ஜீப் போன்ற வாகனம் ஒன்றில் விடுதலைப் புலிப் போராளிகள் சிலர் கடந்த 17 ஆம் திகதி கொழும்புக்குள் ஊடுருவி இருப்பதாக புலனாய்வு வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் சிங்களச் சேவையில் அறிவிக்கப்பட்டது.

இந்த வாகனத்தில் பயங்கர வெடிப் பொருள்கள் இருந்திருக்கக் கூடும் எனவும் இது பற்றி விசாரிக்கப்பட்டு வருவதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன என்றும் அறிவிக்கப்பட்டது. [ஒ-6]

### வடக்கே வந்து திரும்பிய

## தமிழ் பெண் செய்தியாளர் கைதாகி பின் விடுவிப்பு

கொழும்பு, ஜூலை.19

வடக்கே வந்து திரும்பிய — "சண்டே லீடர்" பத்திரிகையின் பெண் செய்தியாளர் ஒருவர் — வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார்.

பேர்ள் தேவநாயகம் என்ற இந்தச் செய்தியாளர், தற்போது யாழ். குடாநாட்டின் உண்மை நிலை பற்றிய தகவல்களை கொழும்பில் வெளியிட்டு விடுவார் என்ற சந்தேகத்திலேயே வவுனியாவில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டார் எனக் கருதப்படுகின்றது.

ஆனால் விடுதலைப் புலிகளுக்கு தகவல்கள் வழங்குகின்றார் என்ற சந்தேகத்தின் பேரில் தாங்கள் அவரைக் கைது செய்ததாக இராணுவத் தரப்பு தெரிவித்தது.

கொழும்பிலிருந்து அச்செய்தியாளரின் பத்திரிகை அலுவலகம் கடும் அழுத்தம் கொடுத்ததை அடுத்து அச்செய்தியாளர் விடுவிக்கப்பட்டதாக பிந்திய செய்திகள் தெரிவித்தன. (உ-6-3)

### வரி செலுத்து---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

23-7-95 (ஞாயிறு) பி.ப. 3 மணிக்கு — சாவகச்சேரி றிபேக் கல்லூரியில்.

★ வடமராட்சி வரி செலுத்தும் பிரிவு

கரவெட்டி, பருத்தித்துறை வடமராட்சி கிழக்கு உ.அ.அ. பிரிவுகள் — 24-7-95 (திங்கள்) பி.ப. 3-00மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரியில். [அ]

### தொடர்ந்து---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் மீட்கப்பட்டு, அந்தந்த இடங்களிலேயே தீமூட்டி எரிக்கப்பட்டன.

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயப் பகுதியில் இரு பெண்களதும், ஓர் ஆணின் சடலச் சிதைவுகள் மீட்கப்பட்டு எரிக்கப்பட்டன.

இதே போன்று வேறு சில இடங்களிலும் மனித சடலங்களின் சிதைவுகளும் மற்றும் ஏராளமான கால்நடைகளின் உடல்களும் நேற்று மீட்கப்பட்டு புதைக்கப்பட்டன.

(ஒ-ஐ 4-15-51)

### ஜி. சீ. ஈ.---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தெரிவிக்கப்பட்டது.

மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவு குறித்து நேற்று மாலை வரை யாழ்ப்பாணத்துக்கு தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

இந்தப் பரீட்சையை ஒரு மாதத்துக்கு பின்போடுமாறு யாழ். கல்விப் பணிப்பாளர்கள் பரீட்சைத் திணைக்களத்துக்கு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்தப் பரீட்சைக்கான வினாத்தாள் மற்றும் காகிதாதிகளை யாழ்ப்பாணத்துக்கு எதிர் வரும் 24 ஆம் திகதி எடுத்துவரக் கப்பல் வசதியை பரீட்சைத் திணைக்களம் செய்திருந்ததாகவும் தெரியவந்தது. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செந்தில்வடிவேல் பரமேஸ்வரன்

ஆலங்குளாய் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட செந்தில்வடிவேல் பரமேஸ்வரன் 15-07-95 இல் அகாலமரணமானார். இவர் நகுலாம்பிகையின் கணவரும், யசோதை (வவுனியா), ரமணன் (ஜேர்மன்) ஆகியோரின் தந்தையும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
மனைவி.

செட்டிவளவு,
நாச்சிமார் கோயில் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய். (37607)

## சின்னப்பு செல்லையா

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 9 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்டவரான சின்னப்பு செல்லையா 16-07-95 இல் கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்ற சின்னப்பு — சின்னத்தங்கம் ஆகியோரின் மகனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி இராமையா ஆகியோரின் மருமகனும், இராசமணி [நேசம்]யின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஆனந்தன், ரவி [மாவீரன்] மற்றும் யமுனா, கருணன், சந்திரன், ரஞ்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், விசுவலிங்கம் காலஞ்சென்றவர்களான சதாசிவம் நாகம்மா, முத்தம்மா மற்றும் செல்லம்மா இராசரெட்ணம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
சி. விசுவலிங்கம்
[தமையன்]

59, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம். [37609]

## திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம் நேற்றுக் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற M. P. S. சுப்பிரமணியத்தின் அன்புமனைவியும், காலஞ்சென்ற சற்குருநாதன், கிருஸ்ணதாஷன் (கனடா), யோகேஸ்வரி, சுந்தரமூர்த்தி (கனடா), யோகநாதன் (கனடா), செந்தில்நாதன் (கனடா), சிவனேசன் (இ.போ.ச. கோண்டாவில்), யோகேஸ்வரன் (கனடா), லோகேந்திரன் (ஜேர்மனி), நாகேஸ்வரி (கனடா), ஜெகதீஸ்வரன் (கனடா), கோபாலகிருஷ்ணன் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும், மனோகரநாதன் (பாபு), யோகேஸ்வரி, கோனேஸ்வரி, இந்திராணி, செ. ஜெயராணி, சி. ஜெயராணி, புஸ்பராணி, கலா, ரூபி, விவேகானந்தன், குமுதினி ஆகியோரின் அன்பு மாமியாரும், ராஜீவன், ராஜா, சுசி, விஜி, சகிலா, ஷிஷா, துவாரகன், அனுஷா, ரமேஷ், சுபாஷினி, நிவேதிகா, சரன் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-7-95) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று காரைக்கால் மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. சிவநேசன்
(மகன்)
மு. மனோகரநாதன் (பாபு)
(மருமகன்)

சைவ பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு. (37611)

## முருகேசு கந்தையா

சண்டிலிப்பாய் மத்தியைச் சேர்ந்த முருகேசு கந்தையா நேற்றுக் காலமாகிவிட்டார்.

இவர் தையல்நாயகியின் அன்புக் கணவரும், தியாகராசா (சுவிஸ்), சிவநேசன் [ஆசிரியர், மானிப்பாய் மெமோறியல் கல்லூரி], தனலெட்சுமி [இந்தியா], மங்களராணி [ஜேர்மனி], இராசரெத்தினம் [ஜேர்மனி] தயாபரன் [அவுஸ்ரேலியா], பராசக்தி (ஆசிரியர், சண்டிலிப்பாய் வடக்கு த. க. பாடசாலை இராசசேகரன் [ஜேர்மனி], DR. ராதா [கொழும்பு] ஆகியோரின் அன்புத்தந்தையும், DR. சரோஜினி தேவி (சுவிஸ்), பத்மராணி, ராஜவேல் (இந்தியா), யோகேஸ்வரன் (ஜேர்மனி), மகேஸ்வரன், சாந்தா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், பாக்கியம், அன்னம்மா, முத்துச்சாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், யசோதரா, சிவதர்சினி, சிவதாரணி, பிரணவன், சுபானு, சஜானு ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு தலங்காவற் பிள்ளையார் கோவிலடி திருநெல்வேலியில் உள்ள சிற்பாசாரியார் சு. இராசரத்தினம் அவர்களின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
சிவநேசன்
[மகன்]

தற்காலிக முகவரி :—
தலங்காவற் பிள்ளையார் கோவிலடி,
திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம். [37614]

## மீண்டும் "குமண" கப்பல்

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ். மாவட்டத்துக்கு உணவுப் பொருள்களை ஏற்றி வரும் பணியில் மீண்டும் 'குமண' கப்பல் சேவையில் ஈடுபட இருக்கிறது.

தற்போது கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் இக் கப்பல் வடக்குக்கு பொருள்களை ஏற்றிவர இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (ஓ-3)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி குணேஸ்வரி இராசரத்தினம்

திருமதி குணேஸ்வரி இராசரத்தினம் நேற்று நண்பகல் காலமானார். இவர் காலஞ்சென்ற வித்துவான் இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சாமிநாதன் ஜெயமணி(கொழும்பு) தம்பதியினரின் அன்பு மகளும், சிந்தாதேவி [ஆசிரியை, யாழ். கன்னியர்மடம் மகா வித்தியாலயம்], மனோகரன் [லண்டன்], தாமரைச்செல்வி [ஆயுர்வேத வைத்தியர்], கலைவேந்தன் [ஜேர்மனி], எழில் இளங்கதிர் [வேலைப் பரிசோதகர் கிளிநொச்சி] ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வஜோதி [முன்னாள் முகாமையாளர் றியோ குறூப் ஒவ் கம்பனி], மனோரஞ்சிதம் [லண்டன்], சேவியர் [ஆசிரியர், யா/ புனித மரியாள் வித்தியாலயம்], வனிதா ஆகியோரின் மாமியாரும், மகேந்திரன் [இளைப்பாறிய பிரதம லிகிதர் வருமானவரி இலாகா], இராசேசுவரி [கொழும்பு], காலஞ்சென்ற குகேந்திரன் — பாலேந்திரன் [புகையிரத நிலைய அதிபர் கோட்டை], நேசேந்திரன் [ஜேர்மனி] ஆகியோரின் அன்புச் சகோதரியும், நிரோஷா, சிந்துஜன், ரம்யா, தர்சிகா, துவசிகா ஆகியோரின் பேர்த்தியுமாவார். இவரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும்.

தகவல் :
செ. செல்வஜோதி
(மருமகன்)

253/3 ஆஸ்பத்திரி வீதி,
கண்டிக்குளி,
யாழ்ப்பாணம். [37616]

## அப்புத்துரை விநாயகமூர்த்தி

மாவிட்டபுரம் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட அப்புத்துரை விநாயகமூர்த்தி நேற்றுக் காலமானார்.

இவர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், குமரகுருமூர்த்தி, அருள்நேசன், மாகாதேவி, ஜெயதேவி, பரமகுமார் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், சிவரதி மலர், பதுமசேனா, மகாலிங்கம், விமலராணி, விவேகானந்தன் ஆகியோரின் மாமனாரும், ஷாயிகிருஸ்சா, மிலாணி, ஜெயராம், நிவேதிதா, சுறோசன், சுபசன் ஆகியோரின் அன்புப் பாட்டனாருமாவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (19-07-95) மு.பகல் 11 மணிக்கு, 5 ஆம் ஒழுங்கை, மருதனாமடம், மானிப்பாய் வீதி உடுவிலில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூவோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
வி. குமரகுருமூர்த்தி
(மகன்)
[37617]

# மரண அறிவித்தல்கள்

## பிரான்ஸிஸ் இமல்டா (திரவியம்)

காலஞ்சென்ற முருகேசு ஆறுமுகம், ஆறுமுகம் மீனாட்சி தம்பதிகளின் ஏகபுத்திரியும், காலஞ்சென்ற க. மனுவல், மனுவல் எலிசபேத் தம்பதிகளின் அன்பு மருமகளும், மனுவல் பிரான்ஸிஸ் [ஓய்வுபெற்ற I.P.W. புகையிரத திணைக்களம்] அவர்களின் அன்பு மனைவியும் ஆகிய பிரான்ஸிஸ் இமல்டா [திரவியம்] காலமாகிவிட்டார்.

இவர் யூலியானா, மரீனா, விக்ரர் (பொறுப்பதிகாரி வலி.கிழக்கு பிரதேசசபை, உப அலுவலகம் நீர்வேலி), றெஜீன் (கிளை முகாமையாளர்), அலோசியஸ், சாள்ஸ் [மக்கள் வங்கி கிளிநொச்சி], அஞ்சலீனா ஆகியோரின் அருமைத் தாயாரும், அலெக்ஸ்லற் (ஓய்வுபெற்ற பிரதம புகையிரத நிலைய அதிபர்), காலஞ்சென்ற ஈபேட் (பரந்தன் இரசாயன தொழிற்சாலை), குணநேசமலர், மரிஸ்ரெலா, றெஜீனா செல்வா (இரசாயனவியல் ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை [19-7-95] பிற்பகல் 3-00 மணியளவில் 41, டேவிட் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தகவல் :
பிரான்ஸிஸ் விக்ரர்
(மகன்)
(பொறுப்பதிகாரி வலி.கிழக்கு பிரதேசசபை)

[37602]

## திருமதி புவனேஸ்வரி தெய்வநாதன்

சங்கானையைச் சேர்ந்த திருமதி புவனேஸ்வரி தெய்வநாதன் 10 - 07 - 95 இல் சங்கானையில் அகால மரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தெய்வநாதனின் (மல்லாகம்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா தங்கம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், புவனேந்திரன் (கொழும்பு), திருமதி நாகேஸ்வரி முத்துக்குமாரசாமி (சங்கானை), காலஞ்சென்ற நாகேந்திரன் (உரும்பிராய்), திருமதி பரமேஸ்வரி வேலாயுதம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி தேவகிதேவி புவனேந்திரன் (கொழும்பு), முத்துக்குமாரசாமி (சங்கானை), திருமதி பூமணி நாகேந்திரன் [உரும்பிராய்], வேலாயுதம் [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மைத்துனியும், பாலகுமாரா, திருமதி மீனாகுமாரி வசிகரன், சாந்திகுமாரி, கோபிகுமாரி, செல்வகுமார், தாரணி, தினேஸ்குமார் ஆகியோரின் அன்பு மாமியும், ஜெனியின் அன்பு பெரியதாயாரும், தனுஷிபாவின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 10-07-95 திங்கட்கிழமை சங்கானையில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்;
ச. முத்துக்குமாரசாமி
(மைத்துனர்)

''புவனவாசா''
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை. [37599]

## திருமதி அன்னலட்சுமி (தங்கரத்தினம்) பத்மநாதன்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்டவரான திருமதி அன்னலட்சுமி (தங்கரத்தினம்) பத்மநாதன் அவர்கள் 11-07-95 செவ்வாய் இறைபதம் அடைந்தார்.

இவர் பெரியவளவு, புலோலி கிழக்கு பொன்னையா பத்மநாதனின் அன்பு மனைவியும், சோதிலிங்கம் (பிரான்ஸ்), அபிதகுசலாம்பிகை (லண்டன்), பத்மலோஜினி (கனடா), தேவலிங்கம் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr தியாகேந்திரன் (லண்டன்), சிவராசா (கனடா), லீலா (பிரான்ஸ்), சிவகுமாரி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற நல்லம்மா (கிளி), பொன்னுத்துரை, காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அஜந்தன், சசிகலா, கோபி, மாதவன், துர்க்கா, மயூரன், பிரசன்னா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை 20 - 07 - 1995 வியாழக்கிழமை மாலை 3மணியளவில் பருத்தித்துறை சுப்பர்மடம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. பத்மநாதன்
(கணவர்)

புலோலி கிழக்கு,
பருத்தித்துறை. [37600]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 19 - 07 - 1995 இல் அச்சிட்டுப் வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org